★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 28உ வெள்ளி (10—2—56) ★ ★ வெளியூர்: தை 29உ சனி (11—2—56) [இதழ் 205

## இன்னும் ஆரம்பமாகவில்லையாம்!

ஷகீத்நகர், பிப். 9—

'தட்சிணப் பிரதேசம்' அமைப்பது பற்றி அமிர்தசரஸ் காங்கிரசிற்கு வந்திருக்கும் மைசூர், திரு-கொச்சி, சென்னை தலைவர்கள் இன்னும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவில்லையாம்! குறிப்பிட்ட மாநிலங்கள் சம்மதித்தால்தான், இரு மொழி மாநிலங்கள் அமைப்பது பற்றி யோசிக்கப்படும் என்பதே காங்கிரஸ் செயற் குழுவின் கொள்கையாம். ஆகவே, சென்னை மந்திரிகள் சம்மதிக்காவிட்டால், 'தட்சிணப் பிரதேசம்' அமையாது என்பது உறுதி என்றும் கூறப்படுகிறது.

# ஜனநாயக வேடத்தில் காட்சிதரும் ஜெங்கிஸ்கான்!

## அகந்தையால் ஆர்ப்பரிக்கிறார் பண்டிதர்

## அடக்குவாராம், ஒடுக்குவாராம்!

### தன் முடிவு தவறானதென்றாலும் நிறைவேற்றியே தீருவாராம்!

### 'புத்தரின் நற்செய்தி' தர வந்த நேருவின் பேய்க்கூச்சல்

ஷகீத் நகர்—

"......சுதந்திரம் பெறுவதற்குக்கூட நாம் பலாத்காரத்தை உபயோகிக்கவில்லை; ஆனால், கடந்த சில வாரங்களில் சின்னஞ் சிறிய மாகாண எல்லைகளுக்காக—அதுபோன்ற சிறிய விஷயங்களுக்காகப் பலாத்காரத்தை உபயோகிக்கத் [illegible] முனைந்திருப்பதைக் காண்கிறோம்.........

"இப்போதைய நிலையில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையின் நியாய அநியாயங்களை—தராதரங்களைப் பற்றிக் க[illegible] வில்லை. ஒரு முடிவு மேற்கொண்டதில், நான் முழுக்க [illegible] தவறாகவே நடந்துகொண்டிருக்கலாம்; ஆனால், அந்த மு[illegible] அமுல் செய்ய நான் நிச்சயம் போராடியே தீருவேன்.

"இந்தக் காங்கிரஸ் உயிரோடிருக்கும் வரை—இந்த சர்க்கார் உயிரோடிருக்கும்வரை காங்கிரஸ், மற்றும் சர்க்காரின் முடிவுகள், உள்நாட்டவர் அல்லது வெளிநாட்டவர்கள் மேற்கொள்ளும் பலாத்காரத்தினால் கட்டளையிடப்பட்டதாயிருக்க முடியாது.

"எந்த ஒரு விஷயமும் ஜனநாயக வழிகளில் தீர்ப்பு காணப்பட வேண்டுமே தவிர, நடுத்தெருக்களில் அல்ல; நடுத்தெருக்களில் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேட எண்ணுபவர்களுக்கு நடுத் தெருவிலேயேதான் பதில் சொல்லியாக வேண்டும்; நான் இதைத் தெளிவாகவே சொல்ல விரும்புகிறேன்; என்ன நேர்ந்தாலும் இந்தியாவின் ஒற்றுமை நிலைநாட்டப்படும்; பலாத்காரம், பயங்கரம், அச்சுறுத்தல் இவை எவை நிகழ்ந்தாலும் எந்தவித மாற்றமும் அனுமதிக்கப்படமாட்டாது."

—என்று, அமிர்தசரஸ் ஷகீத் நகரில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டை ஒட்டிய விஷயாலோசனைக் கூட்டத்தில், 'புத்தரின் நற்செய்தி' பற்றிய தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து பேசும் போது பிரதமர் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

## லால்-சிங் போட்டி

### 'நீலச் சட்டை'ப் படை பவனி!

### இடுக்கிக்குள் காங்கிரஸ்

### அமிர்தசரசில் வேடிக்கை!

ஷகீத் நகர், பிப். 9—

எங்கள் மாநாட்டு ஊர்வலம் தான் பிரமாதமாக இருக்கும்! காங்கிரஸ் தலைவர் ஊர்வலம், மிகச் சாதாரணமானது! பார்! பார்!!—என்று அகாலி தலைவர் தாரா சிங் அறிக்கை விடுகிறார்; 'அகாலிகள், நீலச் சட்டை அணிந்து வர வேண்டும்' என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

"இதற்கு எதிராக, இந்துக்கள், 'மகா பஞ்சாப் மாநாடு' நடத்துகிறார்கள்; அவர்களும் அதே நாளில்—பிப். 11-ல் பிரம்மாண்டமான ஊர்வலம் நடத்தப்போகிறார்கள்; அதுதான் பிரமாதமாக இருக்கப்போகிறது" என்று 'மகா பஞ்சாப்' இயக்கத் தலைவர் கிருஷ்ண லால் கூறுகிறார்.

இரு ஊர்வலங்களும் மோதிக் கொள்ளாதிருக்க விசேஷப் போலீஸ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

"இந்துக்களின் சார்பில் நடைபெறும் மகாபஞ்சாப் மாநாட்டினர், தங்கள் வலிவைக் காட்டி, நேருவை வலையில் போடப் பார்க்கிறார்கள்" என்று அகாலி தலைவர் குற்றம் சாட்டுகிறார்; அகாலி மாநாடு நடத்திக் காட்டி நேருவை மிரட்டிப் பணிய வைப்பதற்கு முயற்சிப்பதாக லால் கூறுகிறார்!!

இரு மாநாடுகளுக்கும் இடையில் காங்கிரஸ் மாநாடு நடைபெறுகிறது.

'வகுப்புவாதிகளுக்கு இடமளிக்கவேண்டாம்!'—என்று கிருஷ்ண லால் காங்கிரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

'வகுப்புவாதிக்கு இணங்காதீர்!'—என்று தாராசிங்கும் நேருவுக்குக் கூறுகிறார்.

சீக்கியர் இந்துக்களை வகுப்புவாதிகள் என்று குற்றம் சாட்டுகின்றனர்; இந்துக்கள், சீக்கியர்களை வகுப்புவாதிகள் என்று குறை கூறுகிறார்கள்!

இந்த இரு மாநாடுகளின் நடுவில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டில், நேரு, 'வகுப்புவாதம் கூடாது.' என்று பேசிக்கொண்டிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★

## அறிக்கை

★

பிப். 20—பொது வேலை நிறுத்தம் பற்றிய அலுவல்களைக் கவனிக்கவும், அதற்குப் பிறகு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிச் சர்வ கட்சிக் கூட்டணியைக் கலந்து ஆலோசிக்கவும் அண்ணா அவர்களைப் பிப்ரவரி இறுதிவரையில் சென்னையிலேயே தங்கியிருக்கும்படி நான் கேட்டுக்கொண்டுள்ளேன். அவர்களும் இசைவு தந்துள்ளார்கள். எனவே, எங்கும் நிகழ்ச்சிகளுக்கு அவர்களை வரும்படி அழைக்க வேண்டாம் என்று கழகத் தோழர்களையும் பிறரையும் கேட்டுக்கொள்கிறேன்.

**இரா. நெடுஞ்செழியன்**
தி. மு. க. பொதுச்செயலாளர்

★★★★★★★★★★★★★★★★★★★

### 'ஹர்த்தால்'

(பொது வேலை நிறுத்தம்)

காந்தியார் விளக்கம்

★

"அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டிக்க 'ஹர்த்தாலே' சரியான முறையாகும். தேசிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக்கூட்டங்களைவிடச் சக்திவாய்ந்த மார்க்கம் இது."

—1919-ல் 'யங் இந்தியா'வில்.

★★★★★★★★★★★★★★★★★★★

### பிரிட்டிஷ் தொழிற் கழக அதிகாரி

சென்னை வருகை

சென்னை, பிப் 10—

பிரிட்டிஷ் தொழில்கள் கழகத்தைச் சேர்ந்த ஸ்டீபன் கார்வின் என்பார் இந்தியா வந்திருக்கிறார்; அவர் நாளைய தினம் சென்னை வருகிறார். தென்னாட்டிற்கு வரும் அவர், கொச்சி, பெங்களூர் ஆகிய இடங்களுக்கும் செல்லத் திட்டமிட்டிருக்கிறார்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை மனதில்கொண்டு, இந்தியத் தொழில் தேவைகளைக் குறித்தும், பிரிட்டிஷ் ஏற்றுமதித் தொழில்களுக்கு முக்கியமானவையான இந்தியப் பொருளாதார விஸ்தரிப்பை ஒட்டிய பிரச்சினைகளைக் குறித்தும் அவர், கழகத்தின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைக் குழுவிற்கு அறிக்கை தருவார் என்று தெரியவருகிறது.

கார்வின், இந்திய சிவில் நிர்வாகத்தில் பங்கு பெற்றிருந்தவரென்றும், 1947 முதல் இந்தியாவிற்கு அடிக்கடி வருகை தந்து இந்தியப் பொருளாதார நிலைகளை நன்கு அறிந்திருப்பவர் என்றும் கூறப்படுகிறது.

# ஆங்கிலேயர் பாதையில் ஆதிபத்தியவாதிகள்

## எந்தச் சொல்லைத்தான் காப்பாற்றியிருக்கிறார் நேரு?

### 'தேவிகுளம்-பீர்மேடு தாலுகாக்களை பறிகொடுத்த கொலைகாரர்கள்'

சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் முன்னணி வீரர்கள் முழக்கம்

சர்வ கட்சிக் கூட்டணியின் பிப். 20—பொதுவேலை நிறுத்தம் குறித்த தி. மு. க. பொதுக்குழு முடிவை விளக்குவதற்காக 30-1-56 அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், கழக முன்னணி வீரர்கள் ஆற்றிய உரையின் சாரம் இங்கு தரப்பட்டிருக்கிறது. பொதுச்செயலாளரின் சொற்பொழிவு முன்னமேயே வெளிவந்திருக்கிறது.

**ஏ. கோவிந்தசாமி**
எம். எல். ஏ.

"'நேரு சொல்லிவிட்டார்—ஆகவே ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று, சென்னை மந்திரிகள் கூறுகின்றனர்.

"நேரு இதுவரை, எதில், தான் சொன்னபடி நடந்து கொண்டிருக்கிறார்? எந்த வாக்குப்படிதான் நேரு தவறாது நடந்துகொண்டிருக்கிறார்? எந்தச் சொல்லைக் காப்பாற்றியிருக்கிறார், நேரு?

"ஆத்திரப்படும்போது தன்னை மறந்த நிலையில், நேரு எதை வேண்டுமானாலும்—எப்படி வேண்டுமானாலும் பேசுவார்; பின், ஆத்திரம் தணிந்ததும் பேச்சை மாற்றிக்கொள்வார்; அப்படியிருக்கும் போது, 'நேரு சொல்லிவிட்டார்' என்பதற்காக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது என்ன நியாயம்?

"'நேரு மிக நல்லவர்; தமிழர் மீது 'காதல், கொண்டவர்' என்று சுப்பிரமணியம் சொன்னாரே, என்ன ஆயிற்று? தமிழர்மீது நேரு 'காதல்' கொண்டதின் விளைவுதானா, தேவிகுளம்-பீர்மேடு தமிழரிடமிருந்து பறிக்கப்பட்டது?

"நான் மந்திரி சுப்பிரமணியத்தை, 'இந்த நான்கு ஆண்டு காலத்தில் எப்போதாவது பாராட்டியிருக்கிறேன் என்றால், அது, அவர் தேவிகுளம் - பீர்மேடு பற்றி சென்னை சட்டசபையில் பேசிய போதுதான்!

"சட்டசபையில், 'தேவிகுளம்-பீர்மேடு தமிழகத்திற்கு நியாயமாக வரவேண்டும்' என்று பேசிய அவர், இப்போது, 'நேரு சொல்லிவிட்டார்; ஆகவே, தேவிகுளம்-பீர்மேடு பகுதிகள் போனால் பரவாயில்லை; அவற்றைக் கேட்கக் கூடாது', என்று பேசுகிறார்.

"'சென்னை ராஜ்யம்' என்றிருக்கும் பெயரை 'தமிழ்நாடு', 'தமிழகம்' என்று ஏன் அழைக்கக்கூடாது? என்ன காரணத்திற்காக, தொடர்ந்து 'சென்னை ராஜ்யம்' என்ற பெயர் இருக்கவேண்டும்? சென்னை சர்க்கார், இந்தப் பெயரை மாற்றுவதற்குக்கூடத் தமிழ்நாட்டை 'தமிழகம்', 'தமிழ்நாடு' என்று அழைக்கவேண்டும்

(4-ம் பக்கம் பார்க்க)

## நாளை!

அண்ணா, கருணாநிதி ஆகியோர் சென்னையில் ஆற்றிய சொற்பொழிவுகள் வெளிவரும்.

பிப். 20—சர்வகட்சி ஹர்த்தால் :

## 'இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்களும் பங்கு பெறலாம்'

" இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்கள் பிப். 20-ந் தேதி சர்வகட்சி ஹர்த்தாலில் கலந்துகொள்ளலாம்."

—இவ்வாறு, 5—2—56 அன்று திருச்சி தேவர் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் பேசுகையில் பெரியார் ஈ. வெ. ரா. குறிப்பிட்டிருக்கிறார். —'தினமணி' : 8-2-56

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 10—2—'56 வெள்ளி

# பிடிவாதம்

மாகாணத் திருத்தங்கள் பற்றி இந்தியப் பேரரசு ஏற்கனவே வெளியிட்டுள்ள முடிவுகளையும், இனி செய்ய நினைத்திருக்கும் முடிவுகளையும் மாற்ற முடியாது — மாற்றப் போவதில்லை என்று அகில இந்தியக் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமன் நாராயணன் நிருபர்களிடம் அறிவித்துள்ளார்.

பலாத்காரத்திற்கும், பயங்கர முறைகளுக்கும பணிய முடியாது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

'அரசாங்கம் முழு சக்தியையும் உபயோகித்துச் சமாளிக்க வேண்டும்' என்றும் கூறியுள்ளார்.

இந்திய[illegible]பேரரசின் மக்கள் விரோதத் தீர்ப்புக் கேட்டு, பம்பாயி[illegible]ம், கட்டாக்கிலும மக்[illegible]ளார்ந்தெழுந்தனர்; நாச [illegible]வேலைகளில் ஈடுபட்டனர்; பயங்கரமான சூழ்நிலை அங்கு நிலவியது.

பம்பாயிலும் கட்டாக்கிலும் நடைபெற்ற பயங்கரச் சம்பவங்கள் கண்டிக்கத்தக்கன—அருவருக்கத்தக்கன என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இடையாது. ஆனால், அந்தப் பயங்கரச்செயல்களுக்கு அடிப்படையாக உள்ள மக்களின் எதிர்ப்புணர்விற்கு மாசு கற்பிப்பது கூடாது. பலாத்காரச் செயல்களால் அதிலுள்ள நியாயம் மறைந்தும் போய்விடாது.

தங்கள் நியாயமான கோரிக்கையை இந்தியப் பேரரசிற்கு உணர்த்த மராட்டிய மக்கள் நாசவேலைகளை மேற்கொண்டனர் என்பதற்காக, நீதி கோரும் உரிமையை அவர்கள் இழந்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. தங்களுடைய கிளர்ச்சியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் விளைவாக, தங்களுடைய நீண்ட கால நேர்மையான உரிமையைக் கொடுக்க வேண்டுமென மராட்டியர்களிடம் எதிர்பார்க்கக் கூடாது—உதவாது. அத்தகு உரிமை, இந்தியப் பேரரசிற்குக்கூட கிடையாது.

பம்பாயைக் குறித்து இந்தியப் பேரசு அளித்த தீர்ப்பு நியாயமானதா, அல்லது ஏற்க மறுத்து எதிர்ப்பில் ஈடுபட்ட மராட்டியர் கோரிக்கை நியாயமானதா என்பது சிந்திக்கத் தக்கது.

'பம்பாய் நகரை மராட்டிய மண்டலம் சூழ்ந்திருக்கிறது; எனவே, பம்பாயை மராட்டியர் கோருவதற்கு நியாயமிருக்கிறது' என்று இந்தியப் பிரதமர் நேருவே வெளிப்படையாக, மராட்டிய மக்களின் உரிமையை ஒப்புக்கொண்டு இருக்கிறார். அவராலேயே நியாயமானது என ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றை அவரே மறுக்கத் துணிவது போல், தங்களுடைய நியாயமான கோரிக்கையைத் தாங்களே மறக்கத் துணிவது என்பது மராட்டியர்களுக்கு மட்டுமல்ல, வேறு எவருக்குமே சாத்தியமாகக் கூடியதன்று. அத்தகுப் போக்கு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்களால்தான், அதிலும் குறிப்பாக இந்தியப்பிரதமர் போன்ற ஒருவரால்தான் மேற்கொள்ள முடியும்.

பம்பாய் நகரைக் கோர மராட்டிய மக்களுக்கு உரிமை இருக்கிறது என ஒப்புக்கொண்ட பிறகு, அதை அம்மக்களுக்கு இல்லாமல் செய்வது எந்தவகையில் நியாயமானதாகும்?

மராட்டிய மண்டலத்தின் தலைநகராகப் பம்பாய் ஆக்கப்பட்டு விடுவதால், பம்பாயில் வாழும் மராட்டியர் நீங்கிய மற்ற மக்களுக்கு விளையக்கூடிய கேடுகள் எவை? அதனால் இந்தியத் துணைக் கண்டத்தின் ஒற்றுமைக்கு ஊறு எப்படி ஏற்படும்? பம்பாய் நகரில் மராட்டிய மக்களின் ஆட்சி ஏற்படுவதை, மற்ற மொழியினர் விரும்புவதாக இல்லை என்று இந்தியப் பிரதமர் ஏன் நினைக்கிறார்? அவ்வாறு அவர் நினைப்பதற்குக் காரணம் யாவை?

இவைகளுக்கு விளக்கம் கூறி இருந்தாலாவது, பம்பாய் நகரைத் தங்களுக்கு இல்லாமல் செய்த இந்தியப் பிரதமர் நேருவின் தீர்ப்பைக் கேட்டு, மராட்டிய மக்கள் ஆத்திரம் கொள்ளாமல் இருப்பர்; அது எதிர்பார்க்கக்கூடியதுமாகும்.

'எது சொன்னாலும் செல்லும்—எது செய்தாலும் தகும்' என்ற ஆணவப்போக்கிலேயே இந்தியப் பிரதமர் நேரு நடந்துகொண்டு இருக்கிறார்.

அதே முனைப்பில்தான் தமிழர்களுக்கும், மராட்டியர்களுக்கும் நேரு பெரும் அநீதி புரிந்திருக்கிறார். அநீதியைத் துடைப்பதுதான் அவருக்கு அழகு. ஆனால், அவர் போக்கை—உள்ளக்கிடக்கையை — பிடிவாதத்தை — காங்கிரஸ் பொதுச்செயலாளர் விளக்கமாக அறிவித்துவிட்டார்.

காங்கிரஸ் கட்சிக்கும், இந்தியப் பேரசிற்கும்தான் இப்பொழுது வித்தியாசம் தெரியவில்லையே —இருப்பதில்லையே! இரண்டும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாக அல்லவா இருக்கின்றன?

இனி, மக்கள்தான் தீர்ப்பளிக்க வேண்டும. மக்களை மறந்த ஆணவக்காரர்களுக்கு மக்கள் தீர்ப்பளிக்கத் தவறியதே கிடையாது. வரலாறு வலியுறுத்துகிறது, இவ்வுண்மையை!

# பறிபோகும் தமிழக உரிமைகள்

## பொதுச்செயலாளர் எச்சரிக்கை

## பிப். 20: பொது வேலைநிறுத்தத்தில் அவசியம் குறித்து விளக்கம்

"தமிழன், தமிழ் நிலப் பரப்பை பன்னெடுங்காலத்திற்கு முன்பே இழந்துவிட்டான்; தொடர்ந்து இழந்துவருகிறான்.

"தமிழ்மொழி நாளுக்கு நாள் அலட்சியப்படுத்தப்படும் நிலை வளர்ந்துகொண்டே வருகின்றது.

"தமிழ் நாட்டு வளங்கள் தொடர்ந்து கொள்ளையிடப்பட்டு வருகின்றன.

"தமிழ் மக்களின் உரிமைகள் பலவும் பறிபோய்விட்டிருக்கின்றன.

"வடவேங்கடம் முதல் தென் குமரிவரை பரந்திருந்த தமிழ் நாடு இன்று உருமாறிப்போய் கிடக்கின்றது.

"கோவில்களில் தமிழ் மொழி இல்லை; இந்த நாட்டில் வாழும் ஆண்டவர்களுக்குத் தமிழில் மந்திரம் சொன்னால் புரியாது; பிரார்த்தனை செலுத்தினால் பிடிக்காது; 'சுவமொழி' (சம்ஸ்கிருதம)யில்தான் சொல்ல வேண்டும.

"ஆட்சிபீடத்திலும தமிழ் இடம பெற்றிருக்கவில்லை; தமிழ் மொழியில் நிர்வாகம் நடைபெறவில்லை.

"இசைத் துறையில்கூட, தமிழ் இல்லாது ஒழிக்கப்பட்டிருந்தது.

"தமிழ் நாட்டு வளங்களை எவர் வேண்டுமானாலும் சுரண்டிச் செல்கிற நிலை இருக்கிறது.

"தமிழ் நாட்டு மக்கள் தங்கள் வாழ்வு எப்படி இருக்க வேண்டும். என்று நிர்ணயிப்பதற்குத் தேவையான உரிமைகள் பெற்றவர்களாக இருக்கவில்லை; இப்போது தமிழக எல்லைகள் ஒவ்வொன்றாகப் பறிபோகின்றன.

"ஆந்திரம் பிரிந்தபோது, அந்த மாநிலத்தில் தமிழக வட எல்லையில் உள்ள பகுதிகள் சில சேர்க்கப்பட்டுவிட்டன; அவை இன்னும் நமக்குக் கிடைத்தபாடில்லை. இப்போது மாநிலப் புனரமைப்பு என்ற பெயரில் நடைபெறும ஏற்பாடுகளின்போது, தேவிகுளம், பீரமேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர்—(கொச்சி), செங்கோட்டையில் பாதி, பாலக்காடு தாலுகாவில் உள்ள பகுதிகள் எல்லாம தமிழகத்துடன் சேர்க்கப்படாமல் கேரளத்துடன் சேர்க்கப்படுகின்றன. இந்த வகையில் தமிழ் நாட்டில்—தமிழ் மக்களின் உரிமைகள் பறிபோய்க்கொண்டிருப்பதை நாம பார்த்துக்கொண்டே இருந்தால், இந்த நிலை வளராமல் தடுப்பதற்கு நாம முயற்சி மேற்கொள்ளாவிட்டால், எதிர்காலத்தில் தமிழகம் எப்படி எல்லாம் சிதையுமோ?

"தமிழகத்தை, நேரு சர்க்கார், கண்ட துண்டமாகச் சிதைத்துவிட மேற்கொண்டிருக்கிற முயற்சி கண்டு தமிழ் மக்கள் கண்ணீர் சிந்துகிறார்கள். அந்தக் காட்சியைத்தான், இங்கு ஓவியமாக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

"பல ஊர்களுக்கும, இந்த ஓவியம பொறித்த சுவரொட்டிகள் தலைமை நிலையத்திலிருந்து அனுப்பப்படுகின்றன.

"தமிழ் மககள் கண்ணீர் விட்டால் மட்டும் போதாது; தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தாக வேண்டும்; தங்கள் உள்ளக் குமுறலை வெளிக் காட்டியாக வேண்டும; அதற்காகத்தான் எல்லா மக்களும் பங்கு பெறக்கூடிய பிப். 20-ந் தேதி பொதுவேலைநிறுத்தம. எல்லா மக்களும் அந்தப் பொதுவேலை நிறுத்தத்தில் பங்குபெற வேண்டுமென தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சியினரும கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு கட்சியினரும்—அவர்களைப் பின்பற்றும் மக்களும் தங்கள் தங்கள் கண்டனத்தைத் தனித்தனியாகக் காட்டுவதைவிட, ஆற்றல் முழுவதையும் ஒன்றுதிரட்டி, ஒரே நாளில் அந்தக் கண்டனத்தை எல்லா கட்சியினருமாகச் சேர்ந்து வெளிக்காட்டுவது பயனுள்ளதாக இருக்கும. ஆகவே, சர்வ கட்சிக் கூட்டணியினர் கேட்டுள்ளபடி, தொழிலாளர்கள்—பாட்டாளிகள்—நடுத்தர மக்கள் எல்லோரும் தங்கள் தங்கள் வேலைகளை பிப். 20-ந் தேதியன்று கவனிக்காது விடுத்து பொது வேலை நிறுத்தத்தில் பங்குபெற வேண்டுகிறேன்.

"இந்தப் பகுதியில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் அலைகடலை அடக்கி கடலுள் சென்று உணவுப் பொருளாம் மீன் பிடித்துவரும் உடல் திறமும், உள்ள உரமும் கொண்டவர்கள்; அவர்கள் தமிழகத்தற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை உணர்ந்து, தமிழகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க முனைவார்கள் என்று நம்புகிறேன்"

—என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 6—2—56 அன்று தொண்டையார்பேட்டை புதுமனைக்குப்பம் தமிழ் வளர்ச்சி மன்றத் துவக்க விழாவில் பேசுகையில குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், மொழிவழி அரசு அமையவேண்டிய அவசியம், அந்த கோரிக்கையை ஏற்க மறுக்கும் காங்கிரஸ் ஆளவந்தார்களின் ஜனநாயக விரோதப் போக்கு, அதை ஒட்டி நாட்டில் தோன்றியுள்ள நிலைகள் ஆகிய எல்லாவற்றையும் விளக்கினார்.

## பம்பாய் சம்பவங்கள் : 7,000 பேர் கைது

### நகர சபைக்கு ஏற்பட்ட சேதார விபரம்

பம்பாய், பிப். 8—

பம்பாயில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்களின்போது நகர சபைக்குச் சொந்தமான பொருள்கள் சேதமடைந்தது பற்றிய விவரங்களை நகர சபை அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

'காஸ்' விளக்குகள் 1,000 மின்சார விளக்குகள் 6,700 ஆகியவை நொறுக்கப்பட்டன என்றும், அதுடன 40 வேறு வகையான சேதாரங்கள் ஏற்பட்டதாயும அவர் தகவல் தந்திருக்கிறார்.

நகர சபைக்குச் சொந்தமான போக்குவரத்து சாதனங்கள், மின்சார நிலையங்கள் இவற்றிற்கு ஏற்பட்ட சேதாரங்கள் இன்னும் கணக்கிடப்படவில்லை என்றும், ஆர்தர் ரோடில் உள்ள சப்-ஸ்டேஷன தாக்கப்பட்டதினால் மட்டும் ரூ 1 50,000 நஷ்டமேற்பட்டிருப்பதாகவும அவா கூறியுள்ளார்.

நகரில் நடைபெற்ற சம்பவங்களின்போதும், சம்பவங்களுக்குப் பிறகும் 7 000 பேர்களை போலீசார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவர்களில் 2,945 பேர்கள் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர் என்றும், கடைகள் கொள்ளையிடப்பட்டதாக 650 புகார்கள் போலீசாருக்கு வந்தன என்றும், சுமார் ரூ 37 இலட்சம் பெறுமான பொருள்கள் கொள்ளையிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

போலீசார் ரூ 1,65,400 பெறுமானமுள்ள பொருள்களை இதுவரை கைப்பற்றினர் என்றும் கூறப்படுகிறது

## அவநம்பிக்கையின் அடிப்படை என்ன ?

### அணு ஆயுதங்களைத் தடை செய்ய முடியாதாம்!

வாஷிங்டன், பிப் 8—

அமெரிக்காவிடமும், இதர நாடுகளிடமும் தற்பொழுது சக்தி வாய்ந்த அணுசக்தி ஆயுதங்கள் இருப்பதாகவும், இந்த ஆயுதங்களைக் கொண்டு அவை ஒன்றையொன்று பூரணமாக அழித்துவிட முடியும் என்றும் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவர் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

இந்த நாச சக்தியைப் பூரணமாகத் தடுத்து நிறுத்த முடியாதென்றும் அவர் கூறினார்.

'அணுகுண்டுகளைத் தாங்கிச்செல்லும் தானே இயங்கும் அஸ்திரங்களைக் கண்டுபிடிப்பதில் சோவியத் ரஷ்யா அமெரிக்காவைவிட முன்னணியில் இருப்பது உண்மைதானா?' என்று நிருபர்கள் கேட்டபோது, 'அத்தகு ஆயுதங்களைச் செய்வதற்கு அமெரிக்க விஞ்ஞானிகள் முதலிடம் கொடுத்திருக்கின்றனர்' என்று மட்டும் ஐசனோவர் கூறினாராம்.

## குடியிருப்பு வசதிக்குக் கடன் வழங்குகின்றனர் !

இந்திய சர்க்கார், குறைந்த வருமானமுள்ள வகுப்பினருக்கான குடியிருப்பு வசதித் திட்டத்தின் கீழ், பல்வேறு மாநில சர்க்கார்களுக்குக் கடனாக 1955 டிசம்பர் மாதம்வரை மொத்தம் ரூ 20·08 கோடி வழங்கியுள்ளனர்.

1955 டிசம்பர் மாதம் வரை ஒதுக்கப்பட்ட தொகைகளிலும், விநியோகிக்கப்பட்ட தொகைகளிலும் முறையே சென்னைக்கு ரூ. 81 இலட்சமும—ரூ 17 74 இலட்சமும் ஆந்திராவுக்கு ரூ. 74 இலட்சமும்—ரூ 10 இலட்சமும், மைசூருக்கு ரூ 100 இலட்சமும்—ரூ. 10 இலட்சமும், திரு-கொச்சிக்கு ரூ 15 இலட்சமும்—ரூ 3 இலட்சமும் கிடைத்தது.

## இந்தியாவுக்குக் கோதுமை

### வெளிநாடுகளிலிருந்து வருகிறது

புதுடில்லி, பிப. 9—

பிப்ரவரி மாதத்தின் கடைசி இரண்டு வாரங்களில வெளிநாடுகளிலிருந்து மொத்தம் 29 600 டன் கோதுமை வருமென்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அதில 9 600 டன் அமெரிக்காவிலிருந்தும், 'மீதி ரஷ்யாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

# 'போர்க்களத்திற்கு மகனை அனுப்பியவள் தமிழ்ப்பெண்'

## 'போனால் போகிறது என்கிறார் காமராசர்'

## சென்னைக் கூட்டத்தில் கண்ணதாசன் ஒப்புவமை

" உடலிலிருந்து இரத்தம் சொட்டச் சொட்ட உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தாலும், தன் நாடு பறிபோகிறது என்ற உடனே, நரம்பு தளர்ந்தவன்கூட 'தாய் நாடு' என்ற நாட்டுப் பற்றினால் வீறிட்டு எழுந்து அதனைக்காக்க முன்வருகிறான்; பண்டைய தமிழர் வரலாற்றை நீங்கள் புரட்டிப்பார்த்தால் தமிழர்களின் வீரம் தெரியும்; அவர்களின் தன்மான உணர்ச்சியும், நாட்டுப்பற்றும் தெரியும். தன் ஒரே மகனை நாட்டுக்காக—நாட்டின் இழிவைத் துடைத்திட, கேசத்தை எண்ணெயிட்டு வாரிச் சீவி, நெற்றியிலே திலகமிட்டு, கரத்திலே வாள் தந்து, 'நாட்டுக்காக போரிட்டு வா, மகனே' என்று அனுப்பிய வீரத்தாய்களை அன்றைய வரலாற்றிலே காண முடியும்.

" 'நாட்டுக்காகப் போரிட்டு வா' என்று சொன்னவள் பெண் மகள்! 'தேவிகுளம்—பீர்மேடு போனால் என்ன, வந்தால் என்ன?' —என்று சொல்கிற காமராசர் ஆண் மகன்!

" தமிழ் வீரத்தைக்காட்டி நாட்டைப் பிடித்தான் பாண்டியன்; இன்று கோட்டையை விடுகிறார் காமராசர்—பச்சைத் தமிழர்! இவர் நாட்டிற்காக உயிரைத் தரவேண்டாம்; எங்களை யாவது சும்மாவிடக்கூடாதா? வரலாற்றை அவருக்கு உணர்த்த—இந்நாட்டு மக்களின் உரிமையுணர்ச்சியைக் காட்ட நீங்கள் பிப். 20-ந் தேதி பொது வேலை நிறுத்தம் செய்யுங்கள்!"

—என்று, 7—2—56 மாலை 6 மணிக்கு, சென்னை அயன்புரம் 'மார்க்கெட் மைதானத்தில்' நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் கண்ணதாசன் பேசினார்

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது :—

" நாம் மானத்தை மறைக்க வேட்டியும், சட்டையும் போட்டிருக்க; மானத்தை மறைக்கவேண்டிய பகுதிகளை மட்டும் கிழித்து எடுத்து மாற்றானுக்குக் கொடுக்கிறார் நேரு; அந்த அளவுக்கு அவரின் தாராள குணமும், தயாள சிந்தையும் இருக்கிறது. அதைக் கண்டு சிறிதும் கவலையற்றுக் கிடக்கிறார்கள், நம் மந்திரிகள்!

" நாட்டிலுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி, ஒரு சர்வ கட்சி கூட்டணி அமைத்து 'பிப் 20-ந் தேதி பொதுவேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும்' என்கின்றபோது, தேவிகுளமும் - பீர்மேடும் எவ்வளவு முக்கியம் என்பதனை நாம் அறிவோம்

" இங்குள்ள தமிழர்கள் தேவிகுளம் — பீர்மேடு காட்சிகளைக் காணாவிட்டாலும்—அது வறண்ட பாலைவனமாகவே இருந்தாலும் எந்தத் தன்மானமுள்ளவனுக்கும் 'தானம்' செய்ய மனம் வராது!

" எங்கும் எந்த நாட்டிலும் பொதுவேலைநிறுத்தம்தான் முதல் எச்சரிக்கை!

" ஒரு நாட்டின் எல்லாப் பகுதிகளும் அமைதியாக; எந்த ஒரு தொழிலும் இயங்காமல் அசைவற்று அமைதியாக இருக்கிறது என்கிற நிலைமை நாட்டிலே நிலவுகிறது என்றால்.........அதற்குப் பின்னால் இன்னது நடக்கும் என்று சொல்லமுடியாத எச்சரிக்கைதான் நாட்டு மக்களின் மனோபாவத்தைக் காட்டுகிறது.

" 'பம்பாய் மராட்டியருக்கு இல்லை'—என்ற நேருவின் தீர்ப்பைக் கேட்டதும் பம்பாய் மக்கள் கொதித்தெழுந்தனர்; கடைகள் எல்லாம் அடைபட்டுக் கிடந்தன: இரயில்கள் நிறுத்தப்பட்டன; பஸ்கள் நின்றன. சட்ட சபை உறுப்பினர்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்தனர்.

" 'நாங்கள் இராஜினாமா செய்தால் பம்பாய் கிடைத்துவிடுமா? நேருவின் தீர்ப்பு மாறிவிடுமா?' என்று கேட்பவர்கள் அங்கில்லை.

" 'நேரு பணியாவிட்டால் பணியவைப்போம்—இழந்த நாட்டைப் பெறுவோம்' என்ற மன முன்னவர்களே அங்குள்ளவர்கள். அதுபோல நாம், நேரு சர்க்காரைப் பணியவைப்போம் என்ற உறுதியுடன் போராடவேண்டும்.

" பண்டித நேருவின் புகழை வைத்துக்கொண்டுதான் காங்கிரஸ் இவ்வளவு நாள் வாழ்ந்துவந்தது 'நேருவிற்குப் பிறகு இந்தியா எப்படியிருக்கும்' என்ற நிலை மாறி, நேருவின் காலத்திலேயே இந்தியாவின் நிலை என்ன? என்கிற நிலைமை வந்துள்ளது

" இங்கு, 'காமராசர் நம்மையெல்லாம் காப்பாற்றுவார் என்று கருதியிருந்தோம்; நம் உரிமைகளை பறிபோகவிட மாட்டார் என்று எண்ணியிருந்தோம்; ஆனால், அவர் முதுகெலும்பு இல்லாதவராக இருக்கிறார். என்பதை இப்போது அறிந்துகொண்டோம்.

" இனிப் பயன் இல்லை; எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்த கூட்டணி, போர்முரசாக உருவெடுத்துள்ளது. ஆட்சியாளர்களின் ஆணவப் போக்கை முறியடிக்க, தமிழர் தம் உரிமைகளைப் பறித்திடும் வஞ்சகர்களுக்கு நம் உணர்ச்சியைக் காட்ட, இழந்த பகுதியைப் பெற பிப்ரவரி 20-ந் தேதியன்று பொதுவேலை நிறுத்தத்தில் நீங்களெல்லாம் பங்குகொண்டு வெற்றிகரமாக்கித் தரவேண்டுகிறேன்."

# 'தமிழருக்கு நண்பர் நேரு என்றனர்; நேருவோ, தாம் யார் என்பதை நிரூபித்துவிட்டார்'

## கோவையில் மதியழகன் முழக்கம்

" நேரு, தேவிகுளம்—பீர்மேடு விடயத்தில் தமிழர்களுக்கு இழைத்துள்ள அநீதி மன்னிக்க முடியாதது; இங்குள்ள 'கட்டியக்காரர்'கள்—'நேரு நீதிமான்; தமிழரிடம் நீங்காத பற்றுக் கொண்டவர்; நியாயம் கிடைக்கும்'—என்று பறைசாற்றி வந்தனர்; ஆனால், நேருவோ, தமது முகமூடியைக் கிழித்து தாம் யார் என்பதை நிரூபித்துவிட்டார்,"

—என்று, 5—2—56 மாலை கோவை, காந்தி சதுக்கத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், தோழர் கே. ஏ. மதியழகன் குறிப்பிட்டார்.

கோவை நகர தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு தோழர் ஏ. என். சாமி தலைமை வகித்தார்.

தி. மு. கழக மாணவர் கிளை மாநில அமைப்புக் குழு உறுப்பினர் தோழர் சி. டி. தண்டபாணி அவர்களும், நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கமும் பேசினர்.

★

தோழர் மதியழகன் அவர்கள் தொடர்ந்து பேசியதாவது :—

" ஒன்றரை மாதங்களுக்கு முன்பு நேரு அவர்கள், மலையாள நாட்டிற்கு—எந்த மலையாளத்தில் தேவிகுளமும், பீர்மேடும் சேர வேண்டுமென்கிறாரோ, அந்த மலையாளத்திற்கு வந்தார்; அவருக்குக் கேரளத்தின் மா, பலா, கமுகினையும், வசீகரத்தையும் வர்ணிப்பதற்குத்தான் நேரமும் நினைப்பும் இருந்தது; உண்மையில் தமிழர்களிடம் அக்கரையிருந்தால், தேவிகுளம்—பீர்மேடு சென்று 'உண்மை நிலை'யைத் தெரிந்துகொண்டிருக்கலாம். ஏன் செய்யவில்லை, நேரு?

மலையாளிக்கும் - தமிழனுக்கும் மனமாச்சரியம் ஏற்படுத்தக்கூடிய பிரச்சினை மீது சிந்தை சென்றதாகக் காணோம். காரணமென்ன? நேரு வந்த நேரத்தில்தான் சோழமண்டலக்கரையில் தஞ்சை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்கள், தமிழகம் கண்டிராத வகையில் பெரு மழையாலும், பேய்க்காற்றாலும் அலைக்கழிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கானவர் பிணமாயினர்; மாடு கன்றுகள் மடிந்தன; கோடிக்கணக்கான செல்வம் பாழாகியது; நியாயமாக நேரு அங்கே சென்றிருக்கவேண்டும்; ஆனால் செல்லவில்லை; காரணம், அது அசாம் அல்ல; பஞ்சாப் அல்ல; பீகார் அல்ல; எனவே, மன்னிப்போம்; ஆனால், தேவிகுளம், பீர்மேடு செல்லாததற்கு எந்த மன்றத்திலாவது பண்டிதர் விளக்கம் தர முடியுமா? வட கொரியாவிற்கும்—தென்கொரியாவிற்கும், கிழக்கு ஜெர்மனிக்கும்—மேற்கு ஜெர்மனிக்கும், இந்தோ-சீன இடைஞ்சலுக்கும் பஞ்சாயத்துப் பேசத்தான் பண்டிதருக்குப் பாசம் இருந்ததே தவிர, தமிழரிடமல்ல; எனவேதான், சௌந்தர்யத்தின் உறைவிடமாகிய தேவிகுளம், பீர்மேட்டினை, இன்றையதினம் சச்சரவுகளின் பிறப்பிடமாய் மாற்றியுள்ளார்."

************************************

தலைமைக் கழகம் : அறிக்கை—3/56

# சர்வ கட்சிக் கூட்டணி

## கழகத் தோழர்கள் கவனிக்க!

★

- ★ தட்சிணப் பிரதேச அமைப்பு எண்ணத்தை எதிர்ப்பது.
- ★ தமிழகத்தின் எல்லையை ஒட்டிப் பிற மாநிலங்களோடு சேர்க்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைப்பது.
- ★ புதிய தமிழ் மாநிலத்தை (இராஜ்யத்தை) உருவாக்குவது.
- ★ சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரேற்படுத்துவது.

என்ற கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சர்வ கட்சிக் கூட்டணியைச், சிதம்பரத்தில் கூடிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் வரவேற்று ஆதரவு தந்துள்ளது.

பொதுக் குழு முடிவுக்கு ஏற்பச், சர்வ கட்சிக் கூட்டணியின் சார்பாக வெளிவரும் அறிக்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான பணிகளை, ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட கொள்கைகளை ஏற்குமாறு அரசியலாரை வற்புறுத்த, பிப். 20-ம் நாளை கடை அடைப்பு—பொது வேலை நிறுத்த நாளாகத் தமிழக மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்று சர்வ கட்சிக் கூட்டணி முடிவு செய்ததற்கிணங்க, ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், பிற கட்சிகளோடும், அமைப்புகளோடும் இணைந்து நின்று, எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்று, பிப். 20-ம் நாள் கடை அடைப்பு—பொது வேலை நிறுத்தத்தை அமைதியான முறையில், பலாத்காரத்துக்கு இடமற்ற வகையில், யாதொரு கேடும், சொத்து நாசமும் ஏற்படாத வழியில், யாருக்கும் தீங்கு ஏற்படாத முறையில் வெற்றிகரமாக நடத்திக்காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பிற கட்சிகளின் ஒத்துழைப்பை எந்தெந்த முறையான வழிகளில் பெற இயலுமோ, அந்தந்த வழிகளில் முயன்று, பொது வேலை நிறுத்தத்தைச் சிறப்பாக நடத்திக் காட்டும்படி தி. மு. கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

சர்வ கட்சிக் கூட்டணியின் சார்பாக அனுப்பிவைக்கப்பெறும் சுவரொட்டிகளை ஆங்காங்கு ஒட்டியும், வேண்டுகோள் அறிக்கைகளைப் பரப்பியும் கடையடைப்பு—பொது வேலை நிறுத்தத்திற்கு ஆக்கம் அளிக்கும்படி கழகத் தோழர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

"அறிவகம்"
சென்னை - 13
7—2—56

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

## நிகழ்ச்சிகள்

7—2—56 மாலை 6 மணிக்கு, சென்னை—அயன்புரம் மார்க்கெட் மைதானத்தில் 'தேவிகுளம்-பீர்மேடு பற்றிய தி. மு கழக விளக்கக் கூட்டம் தோழர் வ. தங்கசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தென்னரசு, இளம்பரிதி, கண்ணதாசன் ஆகியோர் பேசினர்.

புயல் நிவாரண நிதிக்கென, அயன்புரம் பாரதிதாசன் நூல் நிலையச் சார்பில், ரூ 12-12-0-ம், மரகதமணி பேக்கரி சார்பில் உரிமையாளர் என். பெருமாள் ரூ 10-ம் சென்னை மாவட்டச் செயலாளரிடம் கொடுக்கப்பட்டது.

## தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

" 12—2—56 காலை 10 மணியளவில், திருவாரூர்—விஜயபுரம் நூர்தீன் பில்டிங்கில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். மாவட்டத்தில் பொது உறுப்பினர் சேர்த்தல், பிப்ரவரி 20ல் பொதுவேலை நிறுத்தம் பற்றி ஆராய்தல் முதலியன ஆய்வுக்கு எடுத்துக் கோள்ளப்படும்,"

என்று தஞ்சை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் என் எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

ஃ ஃ ஃ

## கோவை நகர தி. மு. க. ஊழியர் கூட்டம்

கோவை, பிப்.

இன்று மாலை 3 மணி முதல் 5 மணி வரையில், கோவை நகர தி. மு. க. கட்டிடத்தில், பிப்ரவரி 20 - பொது வேலை நிறுத்தம் குறித்து ஆலோசிப்பதற்கு, கோவை வட்டாரத்தைச் சேர்ந்த பல கழகங்களின் ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் கே. ஏ. மதியழகன் தலைமை வகித்தார்.

கோவை நகர தி. மு. க. செயலாளர் தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் அனைவரையும் வரவேற்று, பிப்ரவரி 20 - குறித்து விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் புலியகுளம், இராமநாதபுரம், ஒண்டிப்புதூர், சிங்காநல்லூர், இருகூர், குனியமுத்தூர், பாப்பநாயக்கன்புதூர், பீளமேடு, வடகோவை ஆகிய தி. மு. கழகக் கிளைகளும், கணபதி, வள்ளுவர் படிப்பகம், நீலிகோணாம்பாளையம், முத்தமிழ் கலா மன்றம், தியாகராயர் படிப்பகம், எழுச்சி மன்றம், அழகிரி படிப்பகம், தாலமுத்து—நடராசன் படிப்பகம் ஆகிய 15 கழகங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

தோழர்கள் சண்முகசுந்தரம், சி. டி. தண்டபாணி, ஜெயராமன், ராஜு, தங்கமாணிக்கம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

தலைமை வகித்த தோழர் கே. ஏ. மதியழகன், பிப். 20 வேலை நிறுத்தத்தின் முக்கியத்துவத்தையும், கூட்டணியில் அங்கம் வகிக்கும் மற்ற கட்சிக்காரர்களுடன் நாம் ஒத்துழைக்கவேண்டிய அவசியத்தையும், மற்ற வழிவகைகளையும் விளக்கிப் பேசினார்.

## ஏற்றுக்கொண்டதாம்

கல்கத்தா, பிப். 6—

'வங்காளம்—பீகார் மாநிலங்களை ஒன்றாக இணைக்கவேண்டுமென்ற தன்னுடைய யோசனையை மேற்கு வங்காள அமைச்சரவையும், செயற்குழுவும் ஏற்றுக்கொண்டுவிட்டன' என்று முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய் மேல் சபையில் கூறினாராம்.

# முன்னணி வீரர்கள் முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதைக்கூட ஏன் வற்புறுத்தாம லிருக்கிறார்கள்?

"இந்த சர்க்கார் இதை எல்லாம் செய்யவில்லை — தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை தமிழகத்துடன் சேர்க்க முடியவில்லை—'தமிழ்நாடு' என்று சென்னைக்குப் பெயரிட மறுக்கிறார்கள் என்பதினால் தான், தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சியினரும் ஒன்றுகூடி, வரும் பிப்ரவரி 20-ந் தேதியன்று பொது வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்திருக்கின்றனர். இந்த சர்வ கட்சித் தலைவர்கள் முடிவை சிதம்பரத்தில் கூடிய தி. மு. கழகப் பொதுக் குழுவும் ஆதரித்திருக்கிறது — அங்கீகரித்திருக்கிறது; எனவே, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும், தமிழர்களுக்கு நேரு சர்க்கார் புரிந்துள்ள அநீதியைக் கண்டிக்க, தமிழர்களுக்கு உரிய நியாயமான பகுதிகளைத் தமிழகத்துடன் சேர்க்க—சர்வகட்சியினரின் வேண்டுகோளுக்கு இணங்கி பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலைநிறுத்தத்தை வெற்றியாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

★

## மதுரை எஸ். முத்து

"தமிழ் மக்கள் இன்று வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்; தென்னாட்டவர், 'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பின்கீழ் வாழ்விழந்து தவிக்கிறார்கள்; வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதியுறுகிறார்கள்: இந்தியத் துணைக் கண்டத்திலேயே தென்னாட்டு மக்கள்தான் மிகவும் பின்தங்கிய நிலையில், வாழ்வு பெற இயலாதவர்களாகக் கஷ்டப்படுகின்றனர்.

"தமிழ் நாட்டிலிருந்துதான்; மக்கள் பெருவாரியாக வெளிநாடுகளுக்கு கூலிகளாகச் சென்றிருக்கின்றனர்.

"இந்தியா முழுவதும் ஒரே நாடுதான் என்பது உண்மையானால், இந்தியாவை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் எல்லாம் ஒரேமாதிரியானவைதான் என்பது உண்மையானால், மலேயா, சிங்கப்பூர், இலங்கை இங்கெல்லாம் தேயிலை ரப்பர் தோட்டங்களில் கூலிகளாகச் சென்றுள்ளவர்களில் தமிழர்களைப்போல் — குஜராத்தி, மார்வாரி, மூல்தானி, சேட் முதலானோரும் சென்றிருக்க வேண்டாமா?

"அந்த வெளிநாடுகளில் கூலிகளாகியுள்ளவர்கள் அனைவரும் தமிழர்கள்தானே! சொந்த நாட்டில் வாழ முடியாத இந்த அவலநிலை தமிழர்களுக்கு மட்டும் ஏற்படவானேன்?

"ஏற்கனவே தென்னாட்டவருக்கு இழைக்கப்பட்டிருக்கும் அரசியல், பொருளாதார அநீதிகளின் விளைவாக இந்த அவலநிலைக்குத் தமிழர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையுடன் போராடிக்கொண்டிருக்கும் தமிழர்களுக்கு மேலும் மேலும் அநீதிகள் தொடர்ந்து இழைக்கப்படுகின்றன.

"வெளிநாடுகளிலும், தமிழர் கவனிப்பாரற்று — கேட்பாரற்று, சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாகித் துரத்தப்படுகின்றனர்.

"தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கு இல்லை—என்று, நேரு சர்க்கார் இப்போது இழைத்துள்ள அநீதி, இதுவரை இழைத்துள்ள அநீதிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போலிருக்கிறது.

இந்த அநீதிகளை எல்லாம் தொடர்ந்து செய்துவரும் நேரு சர்க்காரை இப்போதாவது தமிழக மக்கள் கண்திறந்து பார்த்தாக வேண்டும்.

"டில்லி சர்க்காரின் எதேச்சாதிகாரப் போக்கினால் தமிழர்களுக்கு மாநில அமைப்பு விவகாரத்தில் இழைக்கப்பட்டுள்ள அநீதியை எதிர்த்துப் போரிடத் தமிழ்நாட்டுத் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுவிட்டனர்; தமிழர்கள் விழித்துக் கொண்டுவிட்டனர். கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டுவிட்டனர்; இனியேனும் தமிழர் வாழ்வு பெற—நீதி பெற—நியாயம் பெற வழி பிறக்காதா?"

★

## கே. ஏ. மதியழகன்

"காந்தியார் சுட்டுக்கொல்லப்பட்டது இந்த ஜனவரி 30-ம் நாள் தான்; காந்தியார் சுட்டுக்கொல்லப்பட்டதும், அவரது உடலை எரித்த 'அஸ்தி'யை இந்தியாவெங்கணுமுள்ள நதிகளில் கரைத்தார்கள்; அவரது அஸ்தியைக் கரைத்தபோதே காந்தியாரது புனிதமான கொள்கைகளையும்கூட காங்கிரசார் கரைத்துவிட்டார்கள். மொழிவழி மாநிலம் அமைப்பது என்பது, காந்தியாரைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் கூறிவந்த கொள்கையாகும்; ஆனால், காந்தியார் இறந்த பிறகு அதே காங்கிரசார், 'மொழிவழி மாநிலம் கூடாது' என்று பேசுகிறார்கள்

"வெள்ளைக்காரர்கள் என்ன என்ன காரணங்களுக்காக இந்தியாவைப் பல மாகாணங்களாகத் தம் மிஷ்டப்படி உருவாக்கிவைத்திருந்தார்களோ, அதே காரணங்களுக்காக இன்று, டில்லி ஆதிபத்தியவாதிகள், 'மொழிவழி மாநிலம் கூடாது' என்கிறார்கள்.

"தி. மு. கழகம், மொழிவழியாக மாநிலங்கள் அமையவேண்டும் என்ற கொள்கையுடையது என்பதால், டில்லி சர்க்காரின் இந்தப் போக்கை எதிர்த்து நிற்கிறது. தமிழ் நாட்டில் டில்லி சர்க்காரின் இந்த எதேச்சாதிகாரப் போக்கை எதிர்ப்பவர்கள் எல்லாம் ஒன்றுகூடி முன்னணி ஒன்று அமைத்திருக்கிறார்கள்; அந்த முன்னணி, டில்லியின் தீர்ப்பு தமிழர்களுக்கு இழைத்துள்ள அநீதியை எதிர்க்கும் நோக்குடன்—தமிழக மக்கள் அனைவரும் வரும் பிப். 20ந் தேதியன்று பொது வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமெனக் கேட்டுள்ளது.

"தேவிகுளம், பீர்மேடு வட்டங்கள் தமிழகத்துடன்தான் சேர வேண்டுமென்ற நியாயத்திற்காக நாம் வாதாடுகிற கட்டம் கடந்தாகிவிட்டது; 'இனி போராடித்தான் ஆகவேண்டும்' என்கிற நிலை பிறந்துவிட்டது. அந்த நிலையின் விளைவாகத்தான் பிப். 20 - பொது வேலை நிறுத்தம்.

"நாம் செய்கிற காரியங்கள், நடத்துகிற போராட்டங்கள் வீண் போனதில்லை; அன்று-பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, நாம் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடினோம்; அப்போது இந்தியைத் திணித்து நம்மை எல்லாம் போராட்டத்திற்கு அழைத்த ஆச்சாரியார், இன்று, 'இந்தி கூடாது' என்கிறார்; 'ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டும்' என்று கூறியிருக்கிறார்; 'இந்தியை தென்னாட்டு மக்கள் மீது திணிப்பது, வடிகட்டிய அநீதி' என்கிறார்; 'தென்னாட்டவருக்கும் — இந்திக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை', என்று இடித்துரைத்திருக்கிறார். இப்படி நாம் கடந்த காலத்தில் வெற்றியே பெற்றிருக்கிறோம் — போராட்டங்களில்! எனவே, இந்த முறை பிப். 20 போராட்டத்திலும் வெற்றி பெறுவோம்—அதுவும், எல்லாக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து போராட்டத்தில் ஈடுபடும்போது நாம் வெற்றி பெறுவோம் என்பதில் சந்தேகமென்ன?"

(தோழர்கள் கருணாநிதி, என். வி. நடராசன் பேச்சு நாளை வரும்)

---

### அண்ணா படத் திறப்பு

12—2—56 மாலை 5 மணியளவில் தோழர் நீலநாராயணன் தலைமையில், 33-வது வட்ட கிளைக் கழகப் பணிமனையில் தோழர் மு. குப்புசாமி அவர்கள், அண்ணா படத்தைத் திறந்துவைப்பார். தோழர்கள் பலர் பேசுவர்.

---

### தேவிகுளம்-பீர்மேடு: தி.மு.க. விளக்கம்

## மதுரை:

திலகர் திடலில்
12—2—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். முத்து

★

## திருநள்ளாறு:

தேரடிக்கு அருகில்
12—2—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
ப. அ. கரீம்
பேசுபவர்:
என். வி. நடராசன்

★

## திருப்பத்தூர் (வ. ஆ.)

சந்தை மைதானத்தில்
12—2—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்
ப. உ. சண்முகம்
முல்லை-சத்தி
போளூர்-கே. சுப்ரமணியம்
க. நெடுஞ்சோழன்

★

## செங்கற்பட்டு:

போலீஸ் நிலையம் எதிர் திடலில்
12—2—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
அருண்மொழி

★

## சேலம் அம்மாபேட்டை

காந்தி மைதானத்தில்
12-2-56 மாலை 6-30 மணிக்கு
தலைவர்:
கந்தசாமி
பேசுவோர்:
ஈ. ஆர். கிருஷ்ணன்
சிற்றூர்-ஏ. சுப்பிரமணியம்
ஏ. மாரியப்பன்
கே. ஆர். சித்தன்
எஸ். ஆறுமுகம்

★

## பிள்ளாதுரை:

(தாத்தையங்கார்பேட்டை)
சந்தை மைதானத்தில்
11—2—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எம். பி. முத்துக்கருப்பன்

★

## உதகை:

போஸ் மைதானம்
12—2—56 பகல் 2 மணிக்கு
பேசுபவர்:
கி. மனோகரன்

---

### அருப்புக்கோட்டையில் சர்வ கட்சிக் கூட்டம்

12—2—56 பகல் 10 மணியளவில், முருகன் அச்சக மேன்மாடியில் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களடங்கிய கூட்டம் ஒன்று நடைபெறும்.

---

### சென்னை கல்லூரி மாணவர் தமிழ் மன்றம் துவக்க விழா

12—2—56 மாலை 4-45 மணிக்கு திரு. க. இராமமூர்த்தி தலைமையில், திரு. ரா. பி. சேதுப்பிள்ளை மேற்படி மன்றத்தைத் துவக்கி வைத்துச் சொற்பொழி வாற்றுவார். பல தமிழறிஞர்கள் 'தமிழ் வாழ்வு' குறித்துப் பேசுவர். தோழியர் ஜி கஸ்தூரி இன்னிசை வழங்குவார்.

---

### 43-வது வட்ட தி. மு. க. 5-ம் ஆண்டு விழா

11—2—56 மாலை 6 மணிக்கு, மீர்சாகிப்பேட்டை, வெங்கிடாசல முதலி தெரு, பிள்ளையார் கோவில் திடலில, தோழர் மு. அரங்கநாதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், கே. டி. எஸ். மணி சொற்பொழிவாற்றுவர்.

---

## மதுரை மாவட்ட

### தி. மு. கழகத் தோழர்கட்கு:

"மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் 12-2-56 காலை 10 மணிக்கு, எண் 4, கட்ருபாளையம் நகர கழக அலுவலகத்தில் நடைபெறும். தேவிகுளம்-பீர்மேடு; பிப். 20 போராட்டம் பற்றி முடிவு செய்யப்படும்,"

என்று, மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் அறிவிக்கிறார்

## திருச்சி மாவட்ட

### தி. மு. கழகத் தோழர்கட்கு:

"12-2-56 பிற்பகல் 3 மணிக்கு திருச்சியில், மாநில மாநாட்டு அலுவலகத்தில் (9, கிலேதார் தெரு, திருச்சி) மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம் நடைபெறும்;

பொருள்:—மாநில மாநாடு; உறுப்பினர் சேர்த்தல்; பொதுக் குழு முடிவுகள்"

என்று, திருச்சி மாவட்டச் செயலாளர் அ. பெ. தர்மலிங்கம் அறிவிக்கிறார்

## நெல்லை மாவட்ட

### தி. மு. கழக நிர்வாகிகளுக்கு:

தி. மு. கழகப் பொதுக் குழு முடிவு செய்தபடி, வரும் பிப்ரவரி 20-ந் தேதியன்று நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வது குறித்தும், அதை ஒட்டிய விடயங்கள் குறித்து முடிவெடுக்கவும் நெல்லை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம் 12—2—56 காலை 10 மணியளவில், தூத்துக்குடி செல்விசியர் தெரு, சி. எம். ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்,"

என்று, நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. வி. கே. சாமி அறிவிக்கிறார்.

## சித்தூர் மாவட்ட

### தி. மு. கழக தோழர்களுக்கு:

"12—2—56 பகல் 2 மணியளவில், சித்தூர் மாவட்ட செயற் குழுக் கூட்டம் சித்தூர் மாதாகோயில் தெருவில், கழகக் கட்டிடத்தில் நடைபெறும்,"

என்று, சித்தூர் மாவட்டச் செயலாளர் கே. பார்த்தசாரதி அறிவிக்கிறார்.

## வடார்க்காடு மாவட்ட

### தி.மு. கழகப் பிரதிநிதிகட்கு:

"12—2—56 பிற்பகல் 2 மணிக்கு மாவட்டக் கமிட்டிக் கூட்டம திருப்பத்தூரில் வழக்கறிஞர் திரு. சாமி (நாயுடு) அவர்கள் இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் 20-ந் தேதி நடைபெற இருக்கிற பொது வேலை நிறுத்தத்தின் நடைமுறைகளை வகுக்கவும், அதிகப்படியான உறுப்பினர்களைச் சேர்க்க திட்டம் வகுக்கவும் ஆலோசிக்கப்படும்,"

என்று, வடார்க்காடு மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

## ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயணம்

★

பிப். 11: தஞ்சை
12: மதுரை
13: பாலக்கோடு
14: பர்கூர்
16: கரூர்
17: போடிநாயக்கனூர்
18: லால்குடி
19: குடந்தை

---

### சென்னை 4-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்களுக்கு:

12—2—56 மாலை 3 மணிக்கு கழகப் பணிமனையில் நிர்வாக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுசமயம், கழக வரவு-செலவு, பிப் 20 பொதுவேலை நிறுத்தம், மற்றும் பல பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

### சென்னை 25-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்களுக்கு

12—2—56 காலை 8 மணிக்கு புரசை முத்தியால் நாய்க்கன் தெரு, எண் 29 இல்லத்தில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

### நாகை வட்ட தி. மு. கழக தோழர்களுக்கு:

"12—2—56 பகல் 2 மணிக்கு திருவாரூர்—விஜயபுரம் நூர்தீன் கட்டிடத்தில் நாகை வட்ட தி மு கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் ஏ சந்தானம் முன்னிலையில் நடைபெறும்" என்று வட்டக் குழு செயலாளர் இரா. விசயராகவன் அறிவிக்கிறார்.

### திருவாரூர் தி. மு. கழக தோழர்களுக்கு

12—2—56 இரவு 7 மணிக்கு விசயபுரம் நூர்தீன் கட்டிடத்தில், மாவட்டச் செயலாளர் என் எஸ். இளங்கோ அவர்கள் முன்னிலையில் உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

---

### திருமணங்கள்

12—2—56 காலை 7-30 மணியளவில் சென்னை திருவொற்றியூர் சன்னதி தெரு, எண் 12 இல்லத்தில், தோழர் த. கிருட்டிணமூர்த்தி—தோழியர் ஏ. அம்பிகா திருமணம் தோழர் ஆர். நமசிவாயம தலைமையில் நடைபெறும். தோழர்கள் முகவை - ஆர். எஸ். பாண்டியன், மு த இளஞ்சேரன், கி. ந. மதிவாணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

12—2—26 காலை 9 மணியளவில், சென்னை-வால்டாக்ஸ் ரோட், எண் 192 இல்லத்தில் தோழர் பி. வி. துரைராசு—தோழியர் பட்டம்மாள் சீர்திருத்தத்திருமணம் தோழியர் அலமேலு-அப்பாதுரை தலைமையில் நடைபெறும். தோழர்கள். காஞ்சி-கல்யாணசுந்தரம், வி எஸ் கோவிந்தராசன், இரா. சக்ரவர்த்தி, ம நடராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி —பொறுப்பாளர்.

* * *

12—2—56 காலை 8 மணிக்கு, சென்னை 46-வது வட்டத் தோழர் இரா அரசமழகன் — தோழியர் சு பேபி அம்மையார் திருமணம் தோழர் டி. கே. சீனிவாசன் தலைமையில், சென்னை இராயப்பேட்டை, வெங்கடாசல முதலி தெரு, எண் 31 இல்லத்தில் நடைபெறும்.

* * *

12—2—56 காலை 8 மணிக்கு, சென்னை — மீர்சாகிப்பேட்டை, வெங்கடாசல முதலி தெரு, எண் 31 இல்லத்தில் தோழர் சி. சண்முகம் — தோழியர் கிருட்டிணவேணி; தோழர் அ. சக்கிரவர்த்தி —தோழியர் இராதாபாய் திருமணம் தோழர் மு புரட்சிமணி தலைமையில் நடைபெறும் தோழர்கள் டி. கே. சீனிவாசன், எம். ஆர். மாணிக்கவாசகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ